## விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
## ந.க. எண். 7243/அ3/2019, நாள். 25.07.2019

பொருள் : ஆசிரியர் பயிற்சி – ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்கபூபதி கல்வியியல் கல்லூரி, விழுப்புரம் மாவட்டம் – உற்று நோக்கல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி அளித்தல் – சார்பு.

பார்வை : 1) பெங்களூர் என்.சி.டி.இ. மண்டல இயக்குனரின் கடிதம், F,TN./SEC/SRO/NCTE/2014-2015/63987 நாள். 05.05.2015
2) தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம் /2016 க்கு அனுமதி ஆணை எண். TNTEU/Affin-Contn/2016/1050 நாள்.03.02.2016
3) ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்கபூபதி கல்வியில் கல்லூரி, முதல்வரின் கடிதம், நாள். 24.07.2019

****

பார்வை (3)–ல் காணும் ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்கபூபதி கல்வியியல் கல்லூரியில் B.Ed.,பயின்று வரும் மாணவர்களுக்கு உற்று நோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சி பெற அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ள பள்ளிகளில் உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சி பெற அனுமதியளிக்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள பட்டியலிடிப்பட்ட பள்ளிகளில் **01.08.2019** முதல் **16 வாரங்கள் உள்ளடக்கிய பள்ளி வேலை நாட்கள்** முதல் கற்பித்தல் பயிற்சியில் **(கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில்)** ஈடுபட அனுமதி வழங்கப்படுகிறது.

**பயிற்சி ஆசிரியர்கள்**

1) தாம் மேற்கொள்ளும் உற்று நோக்கல்/கற்பித்தல் வகுப்புகளுக்கான பாடத்திட்டம், கற்பித்தல் உப காரணங்களை, பயிற்சி முடியும்வரை பள்ளியில் வைத்திருத்தல் வேண்டும்.

2) இவர்களின் கற்பித்தல் பணி திருப்திகரமாக உள்ளது என்பதை பள்ளியின் பாட வழிகாட்டி ஆசிரியர்மூலம் சம்மந்தப்பட்ட பள்ளி தலைமைஆசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

3) நாள்தோறும் இவர்கள் எடுத்த வகுப்பு/உற்றுநோக்கிய வகுப்பு, பயன்படுத்திய உபகரணங்கள்/துணைக்கருவிகள் போன்ற விவரங்களை தனியே ஒரு பதிவேடாக பராமரித்து பள்ளியின் தலைமை ஆசிரியர் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.

4) இவர்களின் கற்பித்தல் பணி முறையாக இல்லாதபட்சத்தில் முன்னறிவிப்பு ஏதுமின்றி பள்ளிப் பயிற்சியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படுவர்.

5) முதன்மைக் கல்வி அலுவலர்/மாவட்டக் கல்வி அலுவலர் பள்ளிப் பார்வையின்போது பயிற்சி ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபடவில்லை என்றாலோ தேவையான துணைக்கருவிகள் (உபகரணங்கள் பயன்படுத்தவில்லை என்றாலோ, சம்மந்தப்பட்ட பாட வழிகாட்டி ஆசிரியர், பள்ளியின் ஆசிரியரே அதற்கு பொறுப்பாவார்)

6) சம்மந்தப்பட்ட கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் குறைந்தபட்சம் வாரம் ஒருமுறை பயிற்சி மேற்கொண்டுள்ள பயிற்சி ஆசிரியர்களை வாரம் ஒரு முறையாவது பள்ளியில் அவர்களின் கற்பித்தலை உற்று நோக்கி ஆய்வு செய்து அவர்களின் கற்பித்தலைநெறிப்படுத்த வேண்டும்.

7) பயிற்சி ஆசிரியர்கள் சம்மந்தப்பட்ட பள்ளி ஆசிரியரின் முன் அனுமதியின்றி பயிற்சி நாட்களில் பள்ளிக்கு வருகை தராமல் இருத்தல் கூடாது.

8) சம்மந்தப்பட்ட பள்ளி ஆசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள் காலை இறை வணக்கக் கூட்டத்திற்கு முன்பாக வந்து மாலை கூட்டு உடற்பயிற்சி வரை பள்ளியின் அனைத்து புற/இணை செயல்பாடுகளிலும் உற்று நோக்க ஏதுவாக பள்ளியில் உள்ளனரா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

9) பள்ளியில் ஒரே நேரத்தில் 20 பயிற்சி ஆசிரியர்களுக்கு மேல், கற்பித்தல் பணியில் ஈடுபட தலைமை ஆசிரியர்கள் அனுமதிக்கக்கூடாது.

10) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும்போது அரசால் தமது கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆணையில் வழங்கப்பட்ட விதிமுறைகளை கல்லூரிகள் மீறுவதாக தெரியவந்தால் இந்த அனுமதி ஆணை உடனடியாக ரத்து செய்யப்படும்.

| வ. எண். | பள்ளியின் பெயர் | அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, முருங்கப்பாக்கம் | 07 |
| 2 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, செஞ்சி | 02 |
| 3 | அரசு மேல்நிலைப்பள்ளி, அன்னமங்கலம் | 04 |
| 4 | அரசு மேல்நிலைப்பள்ளி, அனந்தபுரம் | 05 |
| 5 | அரசு மேல்நிலைப்பள்ளி, மேல்ஒலக்கூர் | 02 |
| 6 | அரசு மேல்நிலைப்பள்ளி, நெகனூர் | 02 |
| 7 | அரசு மேல்நிலைப்பள்ளி, மழவந்தாங்கல் | 02 |
| 8 | அரசு மேல்நிலைப்பள்ளி, செவலபுரை | 02 |
| 9 | அரசு மேல்நிலைப்பள்ளி, வானூர் | 01 |
| 10 | அரசு உயர்நிலைப்பள்ளி, கோணை | 03 |
| 11 | அரசு மேல்நிலைப்பள்ளி, சத்தியமங்கலம் | 03 |
| 12 | அரசு உயர்நிலைப்பள்ளி, காரை | 01 |
| 13 | அரசு மேல்நிலைப்பள்ளி, ஆலகிராமம் | 01 |
| 14 | அரசு உயர்நிலைப்பள்ளி, கீழ்மாம்பட்டு | 02 |
| 15 | அரசு மேல்நிலைப்பள்ளி, மேல்மலையனூர் | 05 |
| 16 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,செஞ்சி | 06 |
| 17 | அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளி, கவரை | 04 |
| 18 | அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்பாப்பம்பாடி | 01 |
| 19 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி, பி.என். தோப்பு | 01 |
| 20 | அரசு மேல்நிலைப்பள்ளி, ரெட்டணை | 01 |
| 21 | அரசு மேல்நிலைப்பள்ளி, காரணைபெரிச்சானூர் | 01 |
| 22 | அரசு உயர்நிலைப்பள்ளி, கல்யாணம்பூண்டி | 07 |
| 23 | அரசு மேல்நிலைப்பள்ளி, கப்ளாம்பாடி | 07 |
| 24 | அரசு மேல்நிலைப்பள்ளி, தேவனூர் | 07 |
| 25 | அரசு மேல்நிலைப்பள்ளி, மேல்சித்தாமூர் | 08 |
| 26 | அரசு மேல்நிலைப்பள்ளி, எண்டியூர் | 08 |
| 27 | அரசு மேல்நிலைப்பள்ளி, கெடார் | 08 |
| 28 | அரசு உயர்நிலைப்பள்ளி, கீழ்எடையாளம் | 09 |
| 29 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கண்டாச்சிபுரம் | 09 |
| 30 | அரசு உயர்நிலைப்பள்ளி, தேவதானம்பேட்டை | 09 |
| 31 | அரசு மேல்நிலைப்பள்ளி, வி. புத்தூர் | 09 |
| 32 | அரசு உயர்நிலைப்பள்ளி கூட்டேரிப்பட்டு | 08 |
| 33 | அரசு உயர்நிலைப்பள்ளி நொச்சலூர் | 09 |
| 34 | அரசு உயர்நிலைப்பள்ளி, நடுக்குப்பம் | 07 |
| 35 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருக்கோவிலூர் | 08 |
| | மொத்தம் | 169 |

25/7/19

முதன்மைக் கல்வி அலுவலர்கள்
விழுப்புரம்.

பெறுநர் :
சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள்

**நகல்:-** முதல்வர்,
ஸ்ரீ ரங்கபூபதி கல்வியியல் கல்லூரி,
ஆலம்பூண்டி, விழுப்புரம் மாவட்டம்